பக்கங்கள் 18 + 07

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 12 சனிக்கிழமை 24.02.2024 அதிர்வு 208

## தென்மராட்சியில் யுவதியின் சடலம்

யாழ்., தென்மராட்சியில் 18 வயதான யுவதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி – டச்சு வீதியிலுள்ள வீட்டிலிருந்து யுவதியின் சடலம் நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளது.

04



# தேர்தலை ஒத்திவைக்கின்ற எண்ணம் என்னிடம் இல்லை

## சம்பிக்கவிடம் ரணில் தெரிவிப்பு

**“ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் என்னிடம் இல்லை. இவ்வருடம் குறித்த நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். அடுத்த வருட ஆரம்பத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த எதிர் பார்த்துள்ளோம்.”**

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய குடியரசு முன்னணியின் “நாட்டுக்கான ஒன்றுபட்ட நடவடிக்கை” என்ற தலைப்பிலான முன்மொழிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று கொழும்பில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேர்தலை நடத்துவது தொடர்பில் பாட்டலி சம்பிக்க ரணவக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

“நாட்டின் வீழ்ச்சி அடைந்த பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அரசு கடந்த இரண்டு வருடங்களில் கடுமையாக உழைத்துள்ளது” – என்றும் இதன்போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மறுசீரமைப்புத் தீர்மானங்கள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை

04





# ஆர்.ஆரின் உடலுக்குப் பிரமுகர்கள் அஞ்சலி!

மறைந்த புளொட் அமைப்பின் பிரதித் தலைவரும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளருமான ஆர்.ஆர். (இராகவன்) என அழைக்கப்படும் வேலாயுதம் நல்லநாதரின் பூதவுடல் கொழும்பு – பம்பலப்பட்டியில் அமைந்துள்ள புளொட் காரியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

03

## திடீரெனப் பற்றி எரிந்தது வீடு

# வயோதிபப் பெண் உடல் கருகிச் சாவு!



புத்தளம், ஆராய்ச்சிக்கட்டுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிரிவல்கெல பகுதியில் வீடொன்று தீப்பிடித்து எரிந்ததில் பெண்ணொருவர் உடல் கருகிப் பலியாகியுள்ளார்.

கிரிவல்கெல பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண் தனது கணவருடன் தென்னை ஓலையால் வேயப்பட்ட சிறிய வீட்டில் வசித்து வந்துள்ளார். அந்த வீடு நேற்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்துள்ளது.

வீடு தீப்பற்றிய போது அவரது 70 வயதான கணவர் வெளியேறி உயிரைக் காப்பாற்றியுள்ளார். எனினும், தீக்காயங்களுக்குள்ளான அவர் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தீ விபத்து தொடர்பில் ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கைத்தொலைபேசி திருடி விற்ற குற்றச்சாட்டில் ஒருவர் சிக்கினார்

(வசந்தன்)

வவுனியா நகரப் பகுதியில் கைத்தொலைபேசி திருடி விற்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பழைய பஸ் நிலையப் பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான ஊடக நிறுவனம் ஒன்றில் சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி ஒன்று திருட்டுப் போயுள்ளது என்று வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டையடுத்து தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயக் கொடியின் வழிகாட்டலில், குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஜயத்திலக தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் அஹமட், பொலிஸ் சார்ஜன் திஸாநாயக்கா, பொலிஸ் கான்ஸ்டபிள்களான உபாலி, தயாளன், ரணில் ஆகியோர் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது குறித்த கைத்தொலைபேசி நகரப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் மீட்டதுடன், அந்தக் கைத்தொலைபேசியை திருடி விற்ற நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வவுனியா, சகாயமாதாபுரம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபராவார். மீட்கப்பட்ட கைத்தொலைபேசியையும், கைது செய்யப்பட்ட நபரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.






# ஆர்.ஆரின் உடலுக்குப் பிரமுகர்கள் அஞ்சலி!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது உடலுக்கு நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கட்சித் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.













## "நாட்டுக்கான ஒன்றுபட்ட நடவடிக்கை"

# ஐக்கிய குடியரசு முன்னணியின் முன்மொழிவு ஜனாதிபதியிடம்!

### இன்று கையளித்தார் சம்பிக்க

ஐக்கிய குடியரசு முன்னணியின் "நாட்டுக்கான ஒன்றுபட்ட நடவடிக்கை" என்ற தலைப்பிலான முன்மொழிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் கொழும்பில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்த வில் இடம்பெற்றது.

ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட குழுவினர், ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்ட துடன், குறித்த முன்மொழிவை ஜனாதி பதியிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவன் விஜேவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோரும், ஐக்கிய குடியரசு முன்னணியின் சார்பில் கரு பரண விதான, நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க, சட்டத்தரணி ஷிரால் லக்திலக ஆகி யோரும் கலந்துகொண்டனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தேர்தலை...**

மிகச்சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு அரசு செயற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனை வரினதும் ஆதரவுடன் அதனை மேலும் நடைமுறைப்படுத்துவதே தமது நோக்க மாகும் என்றும் தெரிவித்தார்.

அரசியல் பேதமின்றி நாட்டுக்கான பொதுவான வேலைத்திட்டத்தில் இணையு மாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் விடுத்துள்ள திறந்த அழைப்பையும் நினைவுகூர்ந்த ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் ஏனைய அரசியல் கட்சிகளின் அனைத்து சாதகமான முன்மொழிவுகளையும் உள்ளடக்குவதற்கு தயங்கமாட்டேன் என்றும் தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான சர்வதேச நாணய நிதியத்துடன் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பேச்சில் ஏனைய அரசியல் கட்சிகளும் பங்கேற்க சந்தர்ப்பம் வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி நல்ல பதிலை வழங்கினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தென்மராட்சியில்...**

மேற்படி யுவதி தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார் என்று பொலி ஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சடலம் தற்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோத னைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்தால் பிரதேச மக்களின் வாழ்வாதாரம் மேம்படும்

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கும் போது பிரதேச மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு உள்ளூராட்சித் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "பேடகம்" மலர் வெளியீட்டு விழாவின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொண்டார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் பிரதான மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. ஆளுநரால் நூல் வெளியீட்டு வைக்கப்பட்டதுடன் விசேட உரையும் நிகழ்த்தப்பட்டது.

இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இளம் தலைமுறையினரிடம் வாசிப்புப் பழக்கம் இல்லாமை கவலையளிக்கிறது.

மக்களின் நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்தல், கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கடப்பாடுகள் பிரதேச சபை மற்றும் நகரசபைகளிடம் காணப்படுகின்றது.



பிரதேச சபைகள் தங்களைத்தாமே நிர்வகிக்கக் கூடிய பொறிமுறைகளை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஜனாதிபதியால் பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய எதிர்வரும் ஐந்து ஆண்டுகள் பிரதேச சபைகள் சுயேட்சையாக இயங்கி தங்களுக்கான வருமானங்களை ஈட்டி கொள்ளுதல் அவசியமாகும். ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய சனசமூக நிலையங்களூடாக கள விஜயம் மேற்கொண்டு மக்களின் பிரச்சனைகள் குறித்து ஆராய்வதுடன் கிராம மட்டங்களில் மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்திகளின் விற்பனைகளை மறந்து சர்வதேச நாடுகளிடம் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விற்பனை முகவர்களாக கிராம மக்கள் மாறிவருகின்றனர். இது கவலையளிக்கிறது. இந்த நிலை மாற்றப்படும் போது பிரதேச அபிவிருத்தி ஏற்படும்.

இதேவேளை அரச உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் தமது கடமை நேரத்தில் கைபேசியுடன் பொழுதை கழிப்பதை நான் நேரடியாகவே கண்டுள்ளேன். மக்களின் வரிப் பணத்தில் சம்பளத்தை பெறும் அரச உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தில் பொது மக்களின் தேவைக ளைப் பூர்த்தி செய்ய வேண்டியது முக்கியமான கடமை.– என்றார்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சபாநாயகர் என்ன செய்வார்?

இணைய (நிகழ்நிலை) காப்புச் சட்டத்தை நிறைவேற்றும் விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை - வழிகாட்டல் - முறையாகப் பின்பற்றப்படவில்லை, அதனை மீறியே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதாக சான்றளிக்கப்பட்டுள்ளது என்ற உண்மைகளை ஏற்றுக் கொள்ள மறுத்து, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அடம்பிடிக்கின்றமை, சட்டமூலங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தின் குழு நிலை விவாதங்கள் மற்றும் நடவடிக்கைகள் மீதான நம்பகத்தன்மையைச் சீர்குலைக்கும் என்று சட்டத்துறை பேராசிரியரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

மேற்படி சட்டமூல விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளைத் தூக்கிக் கடாசி விட்டே தன்னிச்சையாக நாடாளுமன்றம் அதை நிறைவேற்றியுள்ளதாக நாட்டின் மனித உரிமைகள் ஆணைக்குழுவே வெளிப்படையாகவும், அப்பட்டமாகவும், தெளிவாகவும் சுட்டிக்காட்டி உள்ள பின்னணியில் அந்த உண்மைகளை ஒப்புக்கொள்ள சபாநாயகர் மறுக்கின்றமை புதிய சந்தேகங்கள் பலவற்றை தோற்றுவித்திருக்கின்றது எனவும் பேராசிரியர் பீரிஸ் கூறியிருக்கின்றார். அது அவதானிக்கத் தக்கதாகும்.

ரணில் - ராஜபக்ஷ அரசு கொண்டுவரும் அடுத்த சர்ச்சைக்குரிய சட்டமூலமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல விவகாரத்திலும் சபாநாயகரும் அரசும் இதே அணுகுமுறையை - உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டலை புறமொதுக்கும் போக்கை - பின்பற்றலாம் என்ற சந்தேகத்தை எதிர்க்கட்சிகள் கிளப்பியுள்ளன.

அரசு முன்வைத்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் பல உறுப்புரைகளை நிறைவேற்றுவதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவும், வேறு சில உறுப்புரைகளை நிறைவேற்றுவதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் அவசியம் என்று உயர்நீதிமன்றம் பரிந்துரைத்து விட்டது.

ஆனால், ரணில் - ராஜபக்ஷ அரசுக்கு நாடாளுமன்றத்தில் இப்போது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லை. அதனால் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டிய அனைத்து விடயங்களையும் மாற்றி, புதிய வடிவத்திலேயே - அரசமைப்பு ஏற்பாடுகளை மீறாத வகையிலேயே அவற்றை மாற்றியமைத்து - அவற்றை இனிச் சட்டமாக்க வேண்டும்.

முன்னிருந்த அரசுகள், நாடாளுமன்றத்தில் தமக்கிருந்த மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவைப் பிரயோகித்து மக்களின் பல அடிப்படை உரிமைகளை முடக்கும் விதத்தில் இறுக்கமான வகையில் உருவாக்கிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றி அமைப்பதற்கு இப்போது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கொண்டிராத ரணில் - ராஜபக்ஷ அரசு முயல்கின்றது.

அதனால் தனது இயலாமையை சமாளிப்பதற்கு, நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் செய்த மாதிரி, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல விடயத்திலும் உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளைப் புறங்கள்ளி, உதாசீனப்படுத்தி, கவனத்தில் எடுக்காமல் விட்டு, தன்னிஷ்டப்படி, ஜனநாயக விரோதமாக இந்த அரசு மீண்டும் செயற்படலாம் என்ற அச்சம் எதிரணைக்கு ஏற்படுவதில் நியாயம் இல்லாமல் இல்லை.

எது, எப்படி என்றாலும் நிகழ்நிலைக் காப்புச் சட்ட விவகாரத்தை எதிர்க்கட்சி எம்.பியான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இப்போது உயர்நீதிமன்றத்திற்குக் கொண்டு போய் இருக்கின்றார். அந்த விடயத்தை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பில் விசாரணை நடத்திய உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பைத் திகதி குறிப்பிடாது ஒத்திவைத்திருக்கின்றது.

இந்த வழக்கை விசாரித்த மூன்று நீதியரசர்களில் ஒருவரான பிரியங்கா ஜெயவர்தனா இம்மாத இறுதியுடன் ஓய்வு பெற இருக்கின்றார். அதனால் இந்த மனுவை ஒட்டித் தான் விசாரித்த விடயத்தின் தீர்ப்பை அவர் ஓய்வுபெற முன்னர் வழங்கியாக வேண்டும். ஆகையினால், இம்மாத இறுதிக்கு முன்னர் - அதாவது அடுத்து வரும் தினங்களில் - இந்த விவகாரத்தை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் முடிவு நிச்சயம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தப்பித் தவறி சுமந்திரனின் மனுவை விசாரணைக்கு ஏற்பது என்ற முடிவுக்கு உயர்நீதிமன்றம் வருமாயின், நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டலை கவனத்தில் எடுத்து அதன்படிதான் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு உள்ளதா, இல்லையா என்பது தொடர்பில் உயர்நீதிமன்றம் தீர்மானிக்கும் - தீர்ப்பளிக்கும் - நிலைமை வரும்.

இப்போது நேரத்துடன் உண்மைகளை ஒப்புக் கொள்ள மறுத்து அடம்பிடிக்கும் சபாநாயகர், அப்போது என்ன செய்யப் போகிறார்? பொறுத்திருந்து பார்ப்போம்...!







# வல்வை பட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற யாழ் இளைஞன் தாய்லாந்திலும் சாதனை!

இந்த வருடம் நடைபெற்ற வல்வை பட்டப் போட்டித் திருவிழாவில் தனது அபாரமான கற்பனைத் திறனைக் கொண்டு போர் தாங்கி ஆகாய விமானத்தை வல்வை வான்வெளியில் பறக்கவிட்டு உலகில் உள்ள அனைத்து தமிழர்களும் வல்வெட்டித்துறையை திரும்பிப் பார்க்க வைத்த விநோதன் இப்பொழுது தாய்லாந்தில் 36 நாடுகள் பங்குபற்றிய பட்டக் காட்சியில் வல்வெட்டித்துறைக்கு மட்டும் பெருமை சேர்க்காது ஒட்டுமொத்த இலங்கையர் அனைவரையும் பெருமை சேர்த்துள்ளார்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கலந்து கொண்டு இரண்டு வித்தியாசமான பட்டங்களை பறக்கவிட்டு அனைவரையும் பெருமைப்படுத்தியுள்ளார்.

விநோதனுக்கு இந்த வாய்ப்பானது டீயலயள என்ற நிறுவனத்தின் அனுசரணை மூலமே கிடைத்துள்ளது. அவர்கள் இலங்கையை பிரதி நிதித்துவப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்த்து விநோதனுக்கு இந்த வாய்ப்பினை வழங்கியுள்ளனர்.

கடந்த 5 நாள்களில் விநோதன் தாய்லாந்துக்கு சென்று இரண்டு பட்டங்களை கட்டி முடித்து அதனை ஒப்பனை பார்த்து பல நாட்டு மக்கள் முன்னிலையில் பறக்க விட்டுள்ளார். அத்துடன் அங்கு பங்கு பற்றிய பல நாட்டுக் கலைஞர்களும் விநோதனின் கைவண்ணப் பட்டத்தைப் பாராட்டியுள்ளனர் .

உலக வரலாற்றில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தித் தாய்லாந்தில் நடைபெறும் பட்டப் காட்சியில் பங்கு பற்றுவது இதுவே முதன்முறையாகும் .









# ரூ.2 லட்சத்து 45 ஆயிரம் புலமைப் பரிசில் நிந்தவூர் பல்கலை மாணவிக்குக் கிடைத்தது

(எம்.எம்.றம்ஸீன்)

நிந்தவூரில் கடந்த 6வருடங்களாக சமூகப் பணிகளை சிறப்பாக மேற் கொண்டு வரும் நிந்தவூர் அல் பஷாயிர் சமூக சேவை அமைப்பின் உதவியை நாடிய நிந்தவூர் 05 ஆம் பிரிவைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபா புலமைப் பரிசில் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

ஒலுவில் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு இந்த வருடம் அந்த மாணவி தெரிவு செய்யப்பட்டுள்ளார். தனது குடும்பத்தின் ஏழ்மையால் கல்வியைத் தொடர முடியாமல் சிரமப்படுவது தொடர்பாக அல் பஷாயிர் அமைப்புக்கு விரிவாக எழுத்து மூலம் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் உதவி வழங்கப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக இந்த மாணவியின் தாயாருக்குக் கைத் தொழில், அடிப்படை உணவுத் தேவை, மாணவியின் கற்றலுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் ஏனைய செலவீனங்களுக்காக அல் பஷாயிர் அமைப்பின் நலன் விரும்பிகளின் உதவியுடன் 2 லட்சத்து 40ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது.

பின்னர் இந்த மாணவியின் பல்கலைக்கழக கல்வி முடிவுறும் வரைக்கும் ஒவ்வொரு மாதமும் கல்வி, உணவு, போக்குவரத்துத் தேவைகளுக்கு 20 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்படவுள்ளது என்று பொதுச் செயலாளர் அல் ஹாபிழ் மௌலவி.எ.பீ. எம்.ஷிம்லி தெரிவித்தார்.



# புதிதாகத் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களுக்குப் புத்தகப் பைகள்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை- மூதூர் பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில் முதலாம் வகுப்புக்குப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட 28 மாணவர்களுக்குப் புத்தகப் பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி (22) பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்ற போதே புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதத்தில் புத்தகப் பைகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்தில் பாரிய கல்வி அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வரும் சண்முகம் குகதாசனின் வழிகாட்டலின் கீழ் இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் மாணவர்களை இன்னும் வலுவூட்டும் சக்தியாக அமைந்துள்ளது என்று பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்தனர்.



இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் தலைவர் சண்முகம் குகதாசன், செயலாளர் கே. சிவானந்தன், ஓய்வு நிலை கோட்டக் கல்வி பணிப்பாளர் வெற்றிவேலு, மூதூர் வலயக் கல்வி பணிமனை அதிகாரிகள், பெற்றோர், ஆசிரியர் என பலரும் கலந்து கொண்டனர்.



# வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு பற்சிகிச்சை முகாம் கல்முனையில்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

ஆண்டுதோறும் மார்ச் மாதம் 20 ஆம் திகதி உலக வாய் சுகாதார தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதனை முன்னிட்டு அதற்கு முன் உள்ள மாதத்தையும் பின்னுள்ள மாதத்தையும் தேசிய வாய் சுகாதார விழிப்புணர்வு மாதங்களாக பிரகடனப்படுத்தி பல்வேறு வேலை திட்டங்கள் தற்போது நடை பெற்று வருகின்றன.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கு அமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை இலங்கை பற் சிகிச்சை சங்கத்தோடு இணைந்து "மகிழ்ச்சியான வாய் ஆரோக்கியமான உடல்" எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்த பற்சிகிச்சை மருத்துவ முகாம் மற்றும் பொது மக்களுக்கான விழிப்புணர்வு என்பன நேற்று (23) பெரியநீலாவணை ஆயுள்வேத வைத்தியசாலையில் பிராந்திய வாய் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச்.எம்.சறூக் தலைமையில் நடை பெற்றது.



இதன்போது பாடசாலை மாணவர்கள், பொது மக்களுக்கு வாய் சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டது. மருத்துவ முகாமில் வாய் சுகாதாரம் பரிசோதனை செய்யப்பட்டு தேவையான பற்சிகிச்சைகளும் இங்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி.சகீலா இஸ்ஸடீன், இலங்கை பற்சிகிச்சை சங்கத்தின் கிழக்கு பிராந்திய தவிசாளர் வைத்தியர் கேதீஸன் உட்பட பல வைத்திய அதிகாரிகள், பிராந்திய சுகாதார பணிமனையின் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





# ஒலுவில் மீனவர் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடல்

(எம்.எம்.றம்ஸீன்)

ஒலுவில் மீனவர்கள் சங்கத்தின் விஷேட அழைப்பை ஏற்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸ் தலைவரும முன் னாள் அமைச்சருமான ஏ.எல்.எம் அதாவுல்லா, ஒலுவில் பிரதேசத்துக்கு விஜயம் செய்து மீனவர்களுடனான கலந்துரையாடினார்.

ஒலுவில் பிரதேசத்தில் ஆழ்கடல் மற்றும் கரைவலை மீனவர்கள் எதிர் நோக்கும் பல பிரச்சினைகள் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப் பட்டன.



# குவைத் தூதுவருடன் தௌபீக் எம்.பி. சந்திப்பு!

(எஸ். சினீஸ் கான்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக் மற்றும் குவைத் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாஃப் எம்.எம். பூ தாஹீர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு வியாழக்கிழமை (22) இடம் பெற்றது.

குவைத்துக்கும் இலங்கைக்குமான நீண்டகால உறவு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் இச் சந்திப்பின் போது நினைவுபடுத்தினார். கடந்த காலங்களில் எமது நாட்டு மக்களுக்கு உதவியமைக்காக தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

மேலும், திருகோணமலை மாவட்ட மக்களின் வாழ்வாதார நிலைப்பாடு, கல்வித் தேவைகள் மற்றும் மீனவர்கள், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் தூதுவரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக் காட்டினார்.

இதன்போது திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. வெளிநாட்டு வேலைவாவாய்ப்புத் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் அல் – ஹிக்மா பவுண்டேசன் தலைவர் இபாதுல்லாஹ் மௌலவியும் கலந்து கொண்டார்.



# தமிழ் இலக்கண, இலக்கிய தினத்தை முன்னிட்டு மாணவருக்குச் செயலமர்வு



(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியை உள்ளடக்கிய தமிழ் பேசும் தெரிவு செய்யப்பட்ட மாணவ, மாணவிகளுக்கான செயலமர்வொன்று பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று (23) இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு இணங்க செயலமர்வு நடைபெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிரதேச மட்ட இலக்கியப் போட்டியை முன்னிட்டுத் தமிழ்மொழி மூலமான மாணவர்களுக்கான தமிழ் இலக்கண, இலக்கிய தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

மாணவர்களின் மொழி ஆளுமை, தமிழ் இலக்கண உச்சரிப்பு, கட்டுரை, ஆக்கம் எழுதுதல் உள்ளிட்ட பல திறன்களை வளர்ப் பதும் இந்தச் செயலமர்வின் மூலமான வெளிப்பாடாக எதிர்பார்க்கப்படுகிறது.



# கால்நடை வளர்ப்போருக்கு நிதியுதவி!

(ஹஸ்பர், அபு அலா)

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் கால்நடைகளை இழந்து பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களுக்கான நிதியுதவியை ,கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி. மதநாயக்க உட்பட அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# சம்மாந்துறை ஜமாலியா வித்திக்கு போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம்

(சம்மாந்துறை)

'ஒரு குடும்பத்துக்கு ஒரு படித்தவர்' என உருவாக்கினால் மாத்திரமே ஊரில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மக்களை உயர்த்த முடியும் எனும் நோக்கில் இயங்கி வரும் திட்டத்தில் சம்மாந்துறை ஜமாலியா வித்தியாலயத்துக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. சம்மாந் துறை பாடசாலையின் தேவையாக கருதப்பட்ட போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம் பாடசாலை நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.



# யானைகளின் தாக்கங்களைத் தடுப்பது தொடர்பில் கலந்துரையாடல் காரைதீவில்



(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேசத்தில் யானைகளின் தாக்கங்களால் பயிர்கள், சொத்துக்கள், உடைமைகள் மற்றும் தொழில் நிலையங்கள் போன்றவற்றில் ஏற்படும் பாதிப்புகளை குறைத்தல் மற்றும் காயமடைதல், உயிராபத்துக்கள் ஏற்படுவதை தடுப்பதற்கான முன்னாயத்தத் திட்டத்தை வெற்றிகரமானதாக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லல் தொடர்பான கலந்துரையாடல் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் காரைதீவு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.பார்த்திபன், நிர்வாக கிராம உத்தியோகத்தர், காரைதீவு பிரதேச சபை செயலாளர், வனஜீவராசிகள் திணைக்களத்தின் வளத்தாப்பிட்டி அலுவலக பொறுப்பதிகாரி, நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், காரைதீவு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர், காரைதீவு மற்றும் சாய்ந்தமருது கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர், கிராம உத்தியோகத்தர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத் தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர், விவசாய அமைப் புகளின் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வ இளைஞர் குழுவின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நேற்றுத் தீ மிதிப்பு!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மாத்தளை பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மாசிமக மகோற்சவ காவடி தீ மிதிப்பு நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை (23) இடம்பெற்றது.

வரலாறு காணாத பெரும் திரளான பக்தர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து இதில் கலந்து கொண்டனர்.











# காத்தான்குடி ஹிழுறிய்யா பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் அங்குரார்ப்பணம்

(கே. எ. ஹமீட் )

காத்தான்குடி ஹிழுறிய்யா வித்தியாலயத்தில் பாடசாலையின் விளையாட்டு மைதான அங்குராப்பண நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எஸ்.ஐ. யாசீர் அரபாத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.








# ஹேன்ட்ஸ் ஸ்ரீ லங்கா அமைப்பினரால் மொனராகலை மாவட்டத்தில் வீடமைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பின்தங்கிய சமூகங்களின் பொருளாதார கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்குடன் முஸ்லிம்ஸ் ஹேன்ட்ஸ் ஸ்ரீ லங்கா அமைப்பால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மொனராகலை மாவட்டத்தின் அலுபொத்த மற்றும் மெதகம பிரதேசத்தில் உதவி வழங்கப்பட வேண்டிய மூன்று குடும்பங்களுக்கு புதிய வீடுகளை வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. தற்காலிக ஓலைக் குடிசைகளில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மிகவும் கஷ்டமான நிலையில் பிள்ளைகளுடன் வசித்து வந்த இந்தக் குடும்பங்களுக்கே இவ்வாறு நிதந்தர வீடுகள் அமைத்து வழங்கப்பட்டன.

# டில்லி, குஜராத்தில் ஆம் ஆத்மி கட்சியுடன் இணைந்து போட்டியிட காங்கிரஸ் முடிவு!



மக்களவைத் தேர்தலில் டில்லி, குஜராத்தில் ஆம் ஆத்மி கட்சியுடன் இணைந்து போட்டியிட காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது. இதையடுத்து இந்த 2 மாநிலங்களிலும் தொகுதிப் பங்கீட்டை காங்கிரஸ் கட்சி இறுதி செய்துள்ளது. மக்களவைத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறவுள்ளது.

எனவே, மக்களவைத் தேர்தல் திகதி எந்த நேரத்திலும் வெளியாகலாம் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. தேர்தல் நெருங்கியுள்ளதால் அரசியல் கட்சிகள் தேர்தலை எதிர்கொள்ள ஆயத்தமாகி வருகின்றன. மத்தியில் ஆளும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசை வீழ்த்த எதிர்க்கட்சிகள் வியூகம் மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் இண்டியா கூட்டணி என்ற பெயரில் காங்கிரஸ், ஆம் ஆத்மி, தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் இணைந்துள்ளன. தற்போது டில்லி, குஜராத் மாநிலங்களில் ஆம் ஆத்மியுடன் இணைந்து காங்கிரஸ் போட்டியிடவுள்ளது.

இதற்காக 2 மாநிலங்களிலும் ஆம் ஆத்மியுடன் காங்கிரஸ் கட்சி தொகுதிப் பங்கீட்டை இறுதி செய்துள்ளது. டெல்லியில் உள்ள 7 மக்களவைத் தொகுதிகளில் ஆம் ஆத்மி கட்சி 4 இடங்களிலும், காங்கிரஸ் கட்சி 3 இடங்களிலும் போட்டியிடவுள்ளது.

டில்லியில் டெல்லி கிழக்கு, மேற்கு, தெற்கு, புதுடில்லி தொகுதிகளில் ஆம் ஆத்மி போட்டியிடும். காங்கிரஸ் கட்சி வடமேற்கு டெல்லி, வடகிழக்கு டெல்லி, சாண்டிசவுக் தொகுதிகளில் போட்டியிடவுள்ளது. கடந்த 2019 தேர்தலில் டில்லியில் உள்ள 7 மக்களவைத் தொகுதிகளையும் பாஜக கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. அதேபோல் குஜராத்திலும் தொகுதிப் பங்கீட்டை ஆம் ஆத்மியுடன் காங்கிரஸ் கட்சி உறுதி செய்துள்ளது. கோவா, சண்டிகர், ஹரியாணாவிலும் தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்பட்டு இருப்பதாகவும் இதுதொடர்பான தகவல் விரைவில்வெளியாகும்என்றும்தெரிகிறது.

குஜராத்தில் ஆம் ஆத்மி கட்சி 2 இடங்களில் போட்டியிடும். மீதமுள்ள இடங்களில் காங்கிரஸ் கட்சி தனது வேட்பாளர்களை களமிறக்கும் என்று தெரியவந்துள்ளது. மேலும் சண்டிகரில் உள்ள ஒரு மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி களமிறங்கும். கோவாவில் ஒரு தொகுதியில் ஆம் ஆத்மியும், மற்றொரு தொகுதியில் காங்கிரஸூம் போட்டியிடும் என்று தெரிகிறது.

ஹரியாணாவிலுள்ள ஒரே ஒரு மக்களவைத் தொகுதியில் ஆம் ஆத்மி களமிறங்கும் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த மக்களவைத் தேர்தலில் கோவாவில் உள்ள 2 தொகுதிகளில் பா.ஜ.க. ஒரு தொகுதியிலும், காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றிருந்தன. இந்நிலையில் சண்டிகரில் உள்ள ஒரே ஒரு மக்களவைத் தொகுதியை ஆம் ஆத்மி கேட்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொகுதிப் பங்கீட்டை இறுதி செய்யும் பணிகளில் காங்கிரஸ் கட்சி வேகம் காட்டி வருகிறது. உத்தரபிரதேசம், மகாராஷ்டிராவைத் தொடர்ந்து தற்போது குஜராத், டெல்லியில் தொகுதிப் பங்கீட்டை அந்தக் கட்சி இறுதி செய்துள்ளது. இதைத் தொடர்ந்து மேற்கு வங்கத்திலும் தொகுதிப் பங்கீட்டை இறுதி செய்யும் பணிகளில் காங்கிரஸ் நிர்வாகிகள் ஈடுபட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# வீதி விபத்தில் உயிரிழந்தார்! தெலுங்கானா எம்.பி. ஒருவர்



தெலுங்கானா நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி லாஸ்யா நந்திதா (37), விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஹைதராபாத்தில் வீதியைப் பிரிப்பதற்காகக் கட்டப்பட்ட தடுப்புச் சுவரில் அவர் பயணித்த கார் மோதி விபத்துக்குள்ளானதில் அவர் உயிரிழந்துள்ளார். நேற்று (23) இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நந்திதா பயணித்த காரை சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் போன நிலையில் விபத்து நேரிட்டதாகவும், அதிகாலை 5.30 மணியளவில் இந்த விபத்து நடந்ததாகவும் ஹைதராபாத் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து நடந்த இடத்திலேயே நந்திதா உயிரிழந்துள்ளார் என்றும் சாரதி ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.




# ஒலியை விட மூன்று மடங்கு வேகமுள்ள பிரமோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணைகள்!

## இந்தியக் கடற்படைக்கு கிடைக்கவுள்ளன

இந்திய கடற்படைக்கு ஒலியை விட மூன்று மடங்கு வேகத்தில் செல்லும் பிரமோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணைகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

சுமார் 19 ஆயிரம் கோடி ரூபா செலவில் 200 இற்கும் மேற்பட்ட பிரமோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களை வாங்குவதற்கு அமைச்சர்கள் குழு அனுமதி வழங்கியுள்ளது.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில்,

இந்தியா-ரஷ்ய கூட்டு முயற்சியான பிரமோஸ் ஏரோ ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட், நீர்மூழ்கிக் கப்பல்கள், கப்பல்கள், விமானங்கள் மற்றும் தரை தளங்களில் இருந்து ஏவக்கூடிய சூப்பர் சோனிக் குரூஸ் ஏவுகணைகளை உற்பத்தி செய்கிறது.

பிரமோஸ் என்று அழைக்கப்படும் இந்த ஏவுகணைகள் ஒலியை விட 3 மடங்கு வேகத்தில் பறக்கும்.

இத்தகைய வலிமை மிக்க 200 பிரமோஸ் ஏவுகணைகளை இந்திய கடற்படைக்குக் கொள்வனவு செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ஏவுகணைகளை வாங்குவதற்கான முறையான ஒப்பந்தம் அடுத்த சில மாதங்களில் இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.- என்றனர்.

# தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் 76 ஆவது பிறந்த தினம் இன்று!

## அ.தி.மு.க. பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி மலர்தூவி மரியாதை

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளை முன்னிட்டுட் அவரது திருவுருவப்படத்துக்கு அ.தி.மு.க. பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இது குறித்துத் அவர் தனது இணையத் தளப் பதிவில்,

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் காவல் தெய்வம், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் வழிவந்த அரசியல் ஞானி, தமிழக மக்களின் பாசத்துக்கு உரிய அன்பு அம்மாவின் 76 ஆவது பிறந்த நாள் இன்று(23).

ஆட்சியிலும் சரி, அரசியலிலும் சரி, எந்தவிதத்திலும் சமரசம் இல்லாமல், யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யாமல், சமநிலையோடு, சமதர்மத்தோடு, சமூக நீதியோடு அரசாண்ட சிங்க நிகரத் தலைவி நம் புரட்சித் தலைவி அம்மா.

தன்னுடைய வாழ்வு இந்த மக்களுக்கான தவ வாழ்வு. எப்போதும் மக்களிடத்திலே அதை நிரூபிக்கின்ற விதமாக “உங்களால் நான், உங்களுக்காகவே நான்” என்று தொடர்ந்து மக்கள் முன் சூளுரை ஏற்று, அதன்படி மக்கள் பணியாற்றிய ஒப்பற்ற தலைவி நம் புரட்சித் தலைவி அம்மா.

அவர் காட்டிய வெற்றிப் பாதையில் தொடர்ந்து நடைபோட உறுதி ஏற்போம்.

எனதருமைக் கழக நிர்வாகிகளும், கழக உடன்பிறப்புகளும்



இரவு, பகல் பாராமல் தேர்தல் பணியாற்றி, புரட்சித் தலைவி அம்மா பெற்றதைப் போன்ற மகத்தான வெற்றியை எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பெற்று, அந்த வெற்றியை புரட்சித் தலைவர், தலைவி அம்மா ஆகியோருக்கு வெற்றி மாலைகளாக, அவர்கள் நீடு துயில் கொள்ளும் நினைவிடங்களில் சமர்ப்பிக்க நாம் அனைவரும் உறுதியேற்போம்.

நம்மையெல்லாம் அன்புடன் அரவணைத்துத் , அரசியல் பாடம் சொல்லி, வழிநடத்திய நம் அன்பு அம்மாவின் பிறந்த நாளில், கழகம் காக்கவும், கழகத்தை தேர்தர்களில் மகத்தான வெற்றி பெறச் செய்திடவும், நாம் அனைவரும் அயரா உழைப்போம்.- என்றுள்ளது.



# தங்கம் கொள்வனவு செய்வதில் சீன இளைஞர்கள் ஆர்வம்!

சீனாவில் தங்கத்தை வாங்குவதில் இளைஞர்கள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர் என்று தென் சீனப் பத்திரிகை தெரிவித்துள்ளது. அத்துடன் வசதி குறைவான மக்களும், 3 மற்றும் 4 ஆம் கட்ட நகரங்களிலும் தங்கம் வாங்குவது அதிகரித்துள்ளது. இதனால் சீனாவில் தங்கத்தின் விலை கடந்த ஆண்டு புதிய உச்சத்தை தொட்டது.

2023 இல் உலகளவில் தங்கத்துக்கான விற்பனையில் சீனாவில் தங்கத்தின் மீதான ஆர்வம் அதிகரித்துள்ளது.

உலகளவில் ஒட்டுமொத்த தங்கத்துக்கான தேவை 5 சத வீதம் குறைந்த நிலையில் சீனாவில் மட்டும் 16 சத விகிதம் அதிகரித்துள்ளது என்று தங்கத்துக்கான உலக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

# ரஷ்ய ஏ-50 இராணுவ உளவு விமானம் இரண்டாவது தடவையும் வீழ்த்தப்பட்டது!



ஒரு மாதத்துக்குள் இரண்டாவது முறையாக ரஷ்ய வி -50 இராணுவ உளவு விமானத்தை சுட்டு வீழ்த்தியுள்ளது என்று உக்ரைன் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் ரோஸ்டோவ்–ஆன்–டான் மற்றும் க்ராஸ்னோடார் நகரங்களுக்கு இடையே விமானம் அழிக்கப்பட்டது என்று உக்ரைன் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

எஸ்-200 ஏவுகணையால் விமானம் வீழ்த்தப்பட்டது என்று சோவியத் விமான எதிர்ப்பு அமைப்பால் அறிவிக்கப்பட்டுள்ளது. எஸ்-200 விமான எதிர்ப்பு அமைப்புகளின் உற்பத்தி 60 ஆண்டுகளுக்கு முன்பு சோவியத் யூனியனில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இந்த அமைப்பு பல முறை நவீனமயமாக்கப்பட்டது.

கனேவ்ஸ்கோய் மாவட்டத்தில் விமானத்தின் சிதைவுகளை அவசர சேவைகள் கண்டறிந்து, தீயை அணைத்ததாகக் கூறப்படுகிறது. இந்தக் கூற்று தொடர்பில் ரஷ்யா எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

ரஷ்யா முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கி இன்று சனிக்கிழமை இரண்டு ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இந்த நிலையில் உக்ரைனின் விமானப் படையின் தலைவர் மைகோலா ஒலேஷ்சுக் தனது சேவை மற்றும் இராணுவ உளவுத்துறைக்கு விமானத்தை வீழ்த்த உதவியதற்காக நன்றி தெரிவித்துள்ளார்.

# சுவிஸ் பொலிஸ் நிலையமொன்றில் மற்றொரு பெண்ணும் உயிரிழப்பு!

## நீதித்துறை அதிகாரிகள் விசாரணை முன்னெடுப்பு

சுவிஸ் பொலிஸ் நிலையம் ஒன்றில் இரண்டாவது தடவையாக மற்றொரு இளம்பெண் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாக கைது செய்யப்பட்ட 20 வயது இளம் பெண் ஒருவரே சுவிஸ் ஜெனீவாவிலுள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர் சுயநினைவின்றிக் கிடந்ததைக் கண்டதாக கூறியுள்ள பொலிஸார், அவசர உதவியை அழைத்த நிலையில் அவர்களால் அந்தப் பெண்ணைக் காப்பாற்றமுடியவில்லை என்றும் கூறியுள்ளனர்.

இந்த ஆண்டில், இதே பொலிஸ் நிலையத்தில் இவ்வாறு காவலில் வைக்கப்பட்டவர் உயிரிழப்பது இது இரண்டாவது முறையாகும். இந்தச் சம்பவம் தொடர்பாக நீதித்துறை அதிகாரிகள் விசாரணை ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர்.



# அம்பாறை மாவட்டத்துக்கு நீதி அமைச்சர் விஜயம்!

(கே. எ. ஹமீட், எஸ்.அஷ்ரப்கான்)

நீதி அமைச்சர் விஜயதாஷ ராஜபக்ஷ அம்பாறை மாவட்டத்துக்கான இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின் போது தீகவாபி ரஜமஹா விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் இன நல்லிணக்கம் தொடர்பான வேலைத் திட்டத்தை மீண்டும் மார்ச் மாதம் ஆரம்பிக்க உள்ளார் என்று இந்த விஜயத்தின் போது குறிப்பிட்டிருந்தார்.

நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அனுராத ஜெயரத்னவும் வருகை தந்துள்ளார்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.ஜெகதீசன், அட்டாளைச் சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஷாபிர் ஆகியோர் இவருடனான சந்திப்பில் கலந்து கொண்டனர்.









பக்கங்கள் 07

கனடா முரசு

சனிக்கிழமை 24/02/2024

## சம்பளக் கட்டுப்பாடு சட்டமூலம் நீக்கம்!

ஒன்ராரியோ,பெப்.24

பொதுத்துறை ஊழியர்களின் சம்பளத்தில் கட்டுப்பாட்டை விதித்த சம்பளக் கட்டுப்பாடு சட்டமூலத்தை ஒன்ராரியோ அரசாங்கம்

05▶




# இமலாயப் பிரகடனத்தில் இருந்து உடனே கனேடியத் தமிழர் பேரவை விலக வேண்டும்

## வலியுறுத்துகின்றது கனேடியத் தமிழர் கூட்டு

ஒன்ராரியோ,பெப். 24

'கனேடியத் தமிழர் கூட்டு' என்பது கனேடியத் தமிழர் காங்கிரஸிற்கு மாற்றான அமைப்பு அல்லது, அது ஒரு கரிசனையாளர் குழு மாத்திரமே என கனேடியத் தமிழர் கூட்டு தெரிவித்துள்ளது.

கனேடியத் தமிழர் கூட்டினால் ஒழுங்கு செய்யப்பட்ட செய்தியாளர் மாநாடு நேற்று (வெள்ளிக்கிழமை - பெப்ரவரி 23) மாலை டொரன்டோ நகரில் நடைபெற்றது.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில், கனேடியத் தமிழர் கூட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி சட்டத்தரணி அபிமன்யுசிங்கம், வண. பிதா சந்திரகாந்தன், சட்டத்தரணி லக்ஸ்மி வாசன், சட்டத்தரணி மரியோ புஷ்பரட்ணம் மற்றும் நீதன் ஷஹன் ஆகியோர் கலந்து கொண்டு ஊடகவியலாளர் கேள்விகளுக்குப் பதிலளித்தனர்.

கனேடியத் தமிழர் கூட்டு என்பது கனேடியத் தமிழர்களின் நலன்சார்ந்த தற்காலிக குழு எனவும், புதிதாக அறிமுகப்படுத்தப்படும் அமைப்பு அல்ல என்பதனை அறிமுகம் செய்வது முக்கியம் என்ற கூற்றுடன் செய்தியாளர் சந்திப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கனேடியத் தமிழர் காங்கிரஸினால், உலகத் தமிழர் பேரவையுடன் இணைந்து முன்னெடுக்கபட்ட இமாலயப் பிரகடனத்தின் எதிரொலியாக பல்வேறு பட்டஆர்வலர்கள் ஒன்றிணைந்து பல கலந்துரையாடல்களை முன்னெடுத்ததன் விளைவாக, இங்கு பேசப்பட்ட விடயங்களை ஊடகங்களுக்குத் தெரிவிப்பதும், கனேடியத் தமிழர் காங்கிரஸுடன் இது குறித்து கலந்துரையாடுவதற்கு விடுக்கப்பட்ட அழைப்புகள் பயனளிக்காத நிலையில் பகிரங்கமாக அதனை அறிவிக்கும்



நோக்குடனுமே இந்தச் செய்தியாளர் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டதாக அதனை ஒழுங்கு செய்தவர்கள் தெரிவித்தனர்.

கனேடியத் தமிழர் காங்கிரஸின் செயற்பாடுகள் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டு வருகின்ற நிலையில், அதன் நிர்வாகத்தினர், அதனை அமைப்பின் செயற்பாடுகள் குறித்து பொறுப்புக் கூறல், வெளிப்படைத் தன்மை மற்றும் மறுசீரமைப்பு என்பன தொடர்பில் ஆக்கப்பூர்வமான, உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தும் நோக்கில் இந்தக் கூட்டு செயற்படவுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

05▶












# கனடா - மட்டக்களப்பு நட்புறவுப் பண்ணை திராய்மடுவில் வியாழனன்று திறந்துவைப்பு!

## பொருளாதார நிலைத்தன்மைக்கு ஓர் அத்திவாரம்

கனடா – மட்டக்களப்பு நட்புறவுப் பண்ணையான கெய்ல் டி ராஜா திட்டத்தின் திறப்பு விழா மட்டக்களப்பு திராய் மடுவில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்றது.

பொருளாதார நிலைத்தன்மை மற்றும் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதை நோக்கமாக கொண்டு இந்தப் பண்ணை உருவாக்கப்பட்டுள்ளது.

கனேடியத் தமிழர் பேரவை மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார அபிவிருத்தி (நீட்) மையத்தின் இந்த முயற்சியானது விவசாய பயிர்ச்செய்கைகளை மேம்படுத்துவதோடு, உள்ளூர் சமூக பொருளாதார சுதந்திரத்திற்கான ஒரு படியாகவும் அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த கூட்டு முயற்சியின் ஆரம்பக் கட்டமாக முருங்கை பயிர்ச்செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கொண்டு வருவதற்கும் அப்பகுதியில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் உறுதுணையாக அமையும்.

கனடா – மட்டக்களப்பு நட்புறவுப் பண்ணையின் திறப்பு விழா உள்ளூர் சமூகத்தின் செழுமைக்கான புதிய சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. நிலையான விவசாய நடைமுறைகளில் கவனம் செலுத்துவதன் மூலம், இந்த முயற்சி சுற்றுச்சூழலின் நல்வாழ்வை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், நிலையான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதையும் உறுதி



செய்கிறது என இந்நிகழ்வை ஒட்டி வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த செயற்திட்டம் பல்வேறு பின்னணியில் இருந்து தனிநபர்கள் மற்றும் அமைப்புகளை ஒன்றிணைத்து ஒரு பொதுவான இலக்கை நோக்கி செயற்படுவதோடு, நிலையான வளர்ச்சியின் மூலம் பொருளாதார சுதந்திரத்தை உருவாக்குவதாகவும் அமையும். கனடா – மட்டக்களப்பு நட்புறவுப் பண்ணை இலாப நோக்குடன் மட்டுப்படுத்தப்படாது. இது ஒற்றுமையின் சின்னம் என்பதோடு தன்னிறைவான எதிர்காலத்திற்கான கூட்டு அபிலாஷையாகும்.

இம்முயற்சியின் முக்கியத்துவத்தையும் சாத்தியமான தாக்கத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், பல உயர்மட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இலங்கைக்கான கனேடிய பிரதி உயர்ஸ்தானிகரும் ஆலோசகருமான டேனியல் பூட், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் ஜே.ஜே. முரளிதரன், முன்னாள் மட்டக்களப்பு மேயர் தியாகராஜா சரவணபவன், கனேடியத் தமிழர் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டான்டன் துரைராஜா, பொருளாளர் திருக்குமரன் திருநாவுக்கரசு, முன்னாள் தலைவர் சுத்தராமமூர்த்தி உமாசுதான், இலங்கை மனிதாபிமான திட்டங்களின் இணைப்பாளர் துஷ்யந்தன் துரைரத்தினம், நீட் மைய இயக்குநர்கள் மயில்வாகனம் யோகேஸ்வரன் மற்றும் எஸ்.பிரதீபன் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இவர்களின் வருகையானது தாயகத்தில் தற்சார்பு சமூகத்தை உருவாக்குவதற்கான கூட்டு முயற்சி மற்றும் பார்வையைப் பகிர்ந்துகொள்வதாக அமைந்திருந்தது.

வாழ்வை மாற்றியமைக்கவும், தன்னம்பிக்கையுள்ள சமூகத்தை உருவாக்கவும் விவசாயத்தின் சக்தியில் நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரையும் இந்த முயற்சியோடு இணைந்து பயணிக்க அழைக்கின்றோம். இந்தத் திட்டத்தை ஆதரிப்பதன் மூலம், ஒரு பண்ணையில் மட்டும் முதலீடு செய்யாமல், நமது சமூகம் மற்றும் அதன் மக்களின் எதிர்காலத்தில் முதலீடு செய்கிறோம்.

நிலையான மற்றும் பொருளாதார ரீதியாக சுதந்திரமான சமூகத்தை உருவாக்குதலே இதன் நீண்ட கால நோக்கமாகும். – என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.





# கனடா - மட்டக்களப்பு நட்புறவுப் பண்ணை திராய்மடுவில் வியாழனன்று திறந்துவைப்பு!



# கனடா - மட்டக்களப்பு நட்புறவுப் பண்ணை திராய்மடுவில் வியாழனன்று திறந்துவைப்பு!




# நீதிபதிகளை நியமிக்கும் குழுத் தலைவராக முதல்வர் டக் போர்ட்டின் முன்னாள் ஊழியர்

## அதை நியாயப்படுத்துகின்றார் அவர்

ஒன்ராரியோ, பெப்.24

மாநில நீதிபதிகளை நியமிப்பதற்கான குழுவில் தமது முன்னாள் ஊழியர்களை உள்ளடக்கிய தீர்மானத்தை ஒன்ராரியோ மாநில முதல்வர் டக் போர்ட் நியாயப்படுத்தியுள்ளார்.

இந்த நீதித் துறை ஆலோசனைக் குழுவின் தலைவராக முதல்வர் போர்ட்டின் முன்னாள் ஊழியர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என கனடாவின் ஆங்கில செய்தி இணையத்தளம் தெரிவித்திருந்தது.

இந்த நியமனங்களை சட்டமாஅதிபர் டக் டவ்னி அறிவித்திருந்தார்.

தமது ஆர்வகுழுக்களை நியமிப்பதற்காகவே கன்சர்வேட்டிவ் அரசாங்கம் மாநிலத்தில் ஆட்சியமைத்தது என ஒன்ராரியோ முதல்வர் தெரிவித்துள்ளார்.

பிரம்டன் நகரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த ஒன்ராரியோ முதல்வரிடம் இந்த நியமனம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்ட போது அவர் இந்த பதிலைத் தெரிவித்துள்ளார்.



லிபரல் அல்லது புதிய ஜனநாயகக் கட்சியை சேர்ந்தவர்களை தாம் நியமிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.



# முன்மொழியப்பட்டுள்ள முக்கிய மாற்றங்களுடன் நோவா ஸ்கோச்சியா மின் கட்டமைப்பு செயற்பாடு

நோவா ஸ்கோச்சியா,பெப்.24

நோவா ஸ்கோச்சியா அரசாங்கம் மாகாணத்தின் மின்சார கட்டமைப்பிற்கு முன்மொழியப்பட்ட முக்கிய மாற்றங்களுடன் முன்னேற திட்டமிட்டுள்ளது.

நோவா ஸ்கோச்சியா மின்சார கட்டமைப்பிலிருந்து சில செயல்பாடுகளை எடுத்துச் செல்லும் புதிய சுயாதீன சக்தி கட்டமைப்பின் உருவாக்கமும், இதில் உள்ளடங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் மாநிலத்தால் உருவாக்கப்பட்ட சுத்தமான மின்சார தீர்வுகள் பணிக்குழுவின் அறிக்கையில் இந்த பரிந்துரைகள் முன்மொழியப்பட்டிருந்தன. பணிக்குழு தனது அறிக்கையை ஜனவரி 31இல் கையளித்திருந்தது. இது மின்சார ஒழுங்குமுறை, உள்கட்டமைப்பு, நம்பகத்தன்மை மற்றும் மலிவு விலை உள்ளடங்கலாக பல வேறுபரிந்துரைகளைஉள்ளடக்கியிருந்தது.

---

## இமலாயப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சில வாரங்களாக கனேடிய தமிழ் காங்கிரஸின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், நிர்வாக உறுப்பினர்களுடன் பலதரப்பட்ட சந்திப்புகளில் ஈடுபட்டனர் எனவும், இந்தச் சந்திப்புகளின் போது இமாலயப் பிரகடனம் தொடர்பான கூட்டின் கவலைகள் தெரிவிக்கப்பட்டன எனவும் குறிப்பிடப்பட்டது.

கனேடியத் தமிழர்களின் உண்மையான குரலாக கனேடியத் தமிழர் பேரவையின் பங்கை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு வெளிப்படையான உரையாடல் மற்றும் ஆலோசனைக்கான அழுத்தமான தேவை இருப்பதாக தாம் கருதுவதாக இந்தக்கூட்டு தெரிவித்தது.

கனேடியத் தமிழர் பேரவையின் ஒரு தலைப்பட்சமான முடிவெடுக்கும் செயல்முறையானது ஜனநாயகப் பிரதிநிதித்துவம் மற்றும் சமூக ஈடுபாட்டின் கோட்பாடுகளை குறைமதிப்புக்குள்ளாக்குவதாகவும், நம்பிக்கையை சிதைப்பதாகவும், கனேடியத் தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கத் தவறுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கைத் தீவில் வாழும் எமது சொந்தங்களின் அரசியல், போருக்குப் பின்னான நீதி, பொறுப்புக்கூறல் பற்றிய கரிசனை இல்லாமலும், இலங்கைத் தீவில் உள்ள தமிழர் தலைமைகளின் பங்களிப்பு இல்லாமலும் தொடங்கப்பட்டுள்ளமையால் இமலாயப் பிரகடனம் குறித்த அச்சமும், சந்தேகமும் நிலவுவதாக கூட்டுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கனேடியத் தமிழர் பேரவையானது இமலாயப் பிரகடனத்தில் இருந்து தம்மை உடனடியாக நீக்கிக் கொள்ள வேண்டும் என்ற மக்களின் கருத்துக்களை வெளிப்படையாக தெரியப்படுத்தியதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

கனேடியத் தமிழர் பேரவையின் பொறுப்பற்ற நடவடிக்கை எமது சமூகத்தின் அரசியல் மற்றும் மனித உரிமைகள் சார்ந்த விடயங்களில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஆகவே, கனேடியத் தமிழர் பேரவை, பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் நிர்வாக மறுசீரமைப்பு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூட்டும் வலியுறுத்தியது.

இது தொடர்பில் கனேடியத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பின் போது கனேடியத் தமிழர் கூட்டின் எதிர்காலத் திட்டங்கள், கனேடியத் தமிழர் பேரவையினால் குறித்த கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படாதவிடத்து எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

இங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்களை கனேடியத் தமிழர் பேரவைக்கு கொண்டு சேர்ப்பது தொடர்பான இணக்கமும் காணப்பட்டது.

கனேடியத் தமிழர் பேரவை கடந்த பல வருடங்களாக ஆரம்பித்த நோக்கத்தில் இருந்து விலகிச் செயற்படுவதனை கனேடியத் தமிழர்கள் கேள்வி கேட்கத் தவறியமையே இன்றைய நிலைக்கான காரணம் எனக் கூட்டு தெரிவித்தது.

கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர்கள் கனேடியத் தமிழர் பேரவை 2009ஆம் ஆண்டு முதல், ஆரம்பித்த நோக்கத்திற்கு வெளியே செயற்பட்டு வருவதாகவும், கனேடிய மக்களால் பேரவை எப்போது நம்பிக்கையிழந்த அமைப்பாக மாறிவிட்டதாகவும், அதனை மீளமைப்பதில் பயன் எதுவும் இல்லை எனவும் சுட்டிக்காட்டினர்.

## சம்பளக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீக்கியுள்ளது.

நீதிமன்ற மேன்முறையீடு தோல்வியடைந்ததையடுத்து இந்தச் சட்டத்தை நீக்குவதாக ஒன்ராரியோ அரசாங்கம் எற்கனவே அறிவித்திருந்தது.

இந்தச் சட்டத்தை இரத்து செய்வது அண்மைய நீதிமன்ற தீர்ப்பால் உருவாக்கப்பட்ட தொழிலாளர்களின் சமத்துவமின்மைக்கு தீர்வாக இருக்கும் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மூன்று வருட காலத்திற்கு பொதுத் துறை ஊழியர்களுக்கான சம்பள உயர்வைக் கட்டுப்படுத்தும் சட்டம், 2019இல் அரச அனுமதியைப் பெற்றதிலிருந்து டக் போர்ட் அரசாங்கத்திற்கு ஒரு சர்ச்சைக்குரிய புள்ளியாக உள்ளது.

பற்றாக்குறையை நீக்க உதவுவதற்கு அவசியமான மற்றும் நேரத்திற்கு உகந்த படிமுறையாக இது இருப்பதாக ஒன்ராறியோ அரசாங்கம் தெரிவிக்கின்றது.

நவம்பர் 2022இல், இந்த சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த வெளியிடப்பட்ட 80 பக்கங்களைக் கொண்ட தீர்மானத்தில், இந்த சட்டம் ஒன்றுகூடல் மற்றும் பேரம் பேசுவதற்கான பொதுத் துறை ஊழியர்களின் உரிமையை மீறுவதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.



# பால நிர்மாண நிறுவனம் ஒன்றின் மீது மொழியுரிமையை மீறிய குற்றச்சாட்டு

மொழியுரிமையை மீறிய குற்றச்சாட்டிற்காக பால நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கனடாவின் உத்தியோகப்பூர்வ மொழிக ளுக்கான ஆணையகத்தின் பூர்வாங்க அறிக்கையிலேயே இந்த விடயம் வெளியாகியுள்ளது.

பாலத்தை நிர்மாணிக்கும் நிறுவ னத்தின் டிஜிட்டல் ஊடக செய்திகள், தொலைபேசி தொடர்பாடல்கள், மற்றும் தொலைபேசி சேவைகள் இரு உத்தியோகபூர்வ மொழிகளின் சம தரத்தினை பின்பற்றவில்லை என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கோர்டி ஹவ் சர்வதேச பால நிர்மா ணத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் மீதே இந்தக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தினால் யூடி யுப்பில்வெளியிடப்பட்டுள்ள காணொல்ஜ்களில் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் உபதலைப்புக்கள் இடம் பெற்றுள்ள போதிலும், ஆங்கிலத்தில் மாத்திரமே குரல் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக கியூபெக் நகரத்துக்கு பொலிஸ் அதிகாரிகள்

கியூபெக்,பெப்.24

கியூபெக் நகர பொலிஸ் சேவைகளுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு உதவும் வகையில் தமது பொலிஸ் அதிகாரிகளை கியூபெக் மாநில பொலிஸ் சேவையானது அனுப்பி வைத்துள்ளது.

வீதியில் குற்றச் செயல்களில் ஈடுபடுதல் போன்ற சம்பவங்கள் கியூபெக் நகரில் அதிகரித்துள்ளன.

இதனைத் தொடர்ந்து சில அதிகாரிகளை தாம் அனுப்பி வைத்துள்ளனர் எனக் கியூபெக் மாநில பொலிஸார் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

கியூபெக்கின் பல பகுதிகள் கும்பலுடன் தொடர்புடைய வன்முறைக் குற்றங்கள் மற்றும் கொலைகள், கடத்தல்கள் மற்றும் சித்திரவதைகள் உள்ளிட்ட பல வன்முறைச் செயல்களை பொலிஸார் ஆவணப்படுத்தியுள்ளனர்.




# காட்டுத்தீப் பாதிப்பு நிவாரண நிதியிலிருந்து நோவா ஸ்கோச்சியாவில் 25 பொது வீடுகள்

நோவா ஸ்கோச்சியா,பெப்.24

கடந்த கோடையில் ஏற்பட்ட காட்டுத்தீயின் நிவாரண நிதியைப் பயன்படுத்தி மாநிலம் முழுவதும் மேலும் 25 பொது வீடுகள் கட்டப்பட்டு வருவதாக மாநில மற்றும் கூட்டாட்சி அதிகாரிகள் கூறுகின்றனர். இது ஒரு தலை முறைக்கும் மேலாக நோவா ஸ்கோச் சியாவில் பொது வீடுகளில் மிகப்பெரிய முதலீட்டின் ஒரு பகுதி யாகும்.

ஒற்றை மற்றும் பல-அலகு மாதிரி வீடுகளை 88 பேருக்கு வழங்கும் என்று நோவா ஸ்கோச்சியா நகர விவகாரங்கள் மற்றும் வீட்டுவசதி அமைச்சர் ஜோன் லோர் மற்றும் ஹாலிபெக்ஸ் நாடாளு மன்ற உறுப்பினர் எண்டி ஃபில்மோர் ஆகியோர் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அறிவித்தார்.

முடிந்தவரை பலருக்கு வீடுகளை வழங்குவதற்காக, பொது வீடுகளுக்கான காத்திருப்புப் பட்டியலைக் குறைக்க அரசாங்கம் முதலீடு செய்து விரைவாகச் செயல்படுகிறது என அவர் இதன்போது தெரிவித்தார்.

புதிதாக அறிவிக்கப்பட்ட அலகுகள் கொண்ட வீட்டுத் தொகுதி கென்ட் ஹோம்ஸால் நிர்மாணிக்கப்பட்டு வரு கின்றது. காட்டுத்தீ வீட்டுவசதி ஆதரவு திட்டத்தில் இருந்து இதற்கு 8.1 மில்லியன் டொலர்கள் நிதி பயன் படுத்தப்படுகின்றது.



# லிபரல் - புதிய ஜனநாயகக் கட்சி இடையே பார்மாகெயார் ஒப்பந்தத்தில் இணக்கப்பாடு

ஒன்ராரியோ,பெப்.24

பார்மாகெயார் ஒப்பந்தத்தில் லிபரல் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சிகள் இணக்கத்திற்கு வந்துள்ளன.

இந்த இணக்கப்பாடானது, கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசாங்கத்தை அதிகாரத்தில் வைத்திருக்க உதவிய நம்பிக்கை மற்றும் வழங்கல் ஒப்பந்தத்தின் கீழ் இரு கட்சிகளும் தொடர்ந்து செயல்பட வழிவகை செய்துள்ளது.

தேசிய தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங், இரு தரப்புக்கும் இடையே பல வாரங்களாக நடந்த பேச்சுக்கள், தேசிய மருந்துக் காப்பீட்டுத் திட்டத்திற்கான, குறுகிய காலத்தில், கருத்தடை மற்றும் நீரிழிவு சிகிச்சை போன்றவற்றின் புதிய பாதுகாப்புக்காகவும் கட்டமைப்பை அமைக்கும் வரைவுச் சட்டத்தை உருவாக்கியுள்ளன எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில், சிரேஷ்ட அரசாங்க அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக ஆங்கில இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.